REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 28உ வியாழன் (12—1—56) ★ ★ வெளியீடு: மார்கழி 29உ வெள்ளி (13—1—56) [இதழ் 181

இரயில்வே அபிவிருத்தி: 2-ம் திட்டத்தில் ரூ. 1,125 கோடி செலவிடப்படுமாம்!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வே அபிவிருத்திக்கு மட்டும் ரூ 1,1,25 கோடி செலவிட சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும், இதுகூட இரயில்வே இணைப்பில் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யப் போதுமானதாயிராது என்றும் இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்திருக்கிறார்.

நாட்டில் ஒற்றுமை இருக்கிறது எனவும், அதற்கு முக்கிய இணைப்புச் சாதனம் இரயில்வே என்றும் கூறிவிட்டு, மீதியுள்ள இந்திய இரயில்வேயுடன் கன்னியாகுமரியை இணைக்க சர்க்கார் விரும்புகின்றனர் என்றும் அந்த மந்திரி கூறினாராம்!

நகரசபை பணம் ஆயிரக்கணக்கில் மோசடி?

ஒரு ரூபாய் பெறுமான எலி வளை ஒன்பது ரூபாய்க்கு வாங்கப்பட்டதாம்

பீஜப்பூர் நகரசபை மீது இலஞ்ச ஒழிப்புப் போலீசார் நடவடிக்கை

பீஜப்பூர், ஜன. 10—

பீஜப்பூர் நகரசபையில் இலஞ்ச ஊழல் தாண்டவமாடுவதாக இலஞ்ச ஒழிப்புப் போலீசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில், போலீசார், நகரசபை அலுவலகத்தில் இருந்த எலி வளைகள், அவை வாங்கப்பட்டதற்கான தஸ்தாவேஜுகள் முதலியனவற்றைக் கைப்பற்றியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது

சம்பளம் வாங்குபவர்களும், கௌரவ ஊழியர்களும் கூட்டாகச் சேர்ந்து, நகரசபைக்குச் சொந்தமான பணத்தை ஆயிரக்கணக்கில் மோசடி செய்திருப்பதாகக் காங்கிரஸ் ஊழியர் ஒருவர் தகவல் தந்தார்.

அதையொட்டி போலீசார் இரகசியமாக விசாரணைகள் நடத்தியபின்பு, எலி வளைகள் வாங்கப்பட்டதில் பண மோசடி நடந்திருப்பதாகக் கண்டுபிடித்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

ஒரு ரூபாய் முதல் மூன்றரை ரூபாய்வரை பெறக்கூடிய எலி வளைகள் ஒன்பதேகால் ரூபாய் வரை தரப்பட்டு வாங்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டதாம்; இதற்காக, பொய்ப் 'பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன என்றும், அவையும் கைப்பற்றப்பட்டுள்ள தஸ்தாவேஜுகளில் சிலவாகும் என்றும் கூறப்படுகிறது.

இந்த நகரசபையினர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளை இப்போது செய்துகொண்டிருக்கின்றனர் என்றும், இந்த நேரத்தில் போலீசார் நடவடிக்கை மேற்கொண்டிருப்பது, நகரசபையினருக்கு 'தலைவலி' தருவதாயிருப்பதாயும் கூறப்படுகிறது.

'சமாதான வீரர்'களின் 'ஜினீவா உணர்வு'!

நீண்டதூரம் சென்று வெடிக்கும் புது இரகசிய அணுகுண்டு

அமெரிக்க — ரஷ்ய வல்லரசுகள் முயற்சி

நியூயார்க், ஜன. 11—

ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்தைச் சுடுவதற்கான புது இரகசிய அணு ஆயுதம் ஒன்றை விரைவில் வல்லரசுகள் செய்யக்கூடும் எனக் கூறப்படுகிறது.

இப்புது ஆயுதத்தை பூமிக்கடியில் மறைந்துள்ள மேடைகளிலிருந்து வெடிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இது, ஐ. நா. ஆயுதக் குறைப்பு நிபுணர்களுக்குப் புதுக் கவலையை உண்டாக்கியிருக்கிறது என்றும், பூமிக்கடியில் மறைத்து வைக்கப்படும் இந்தவித இரகசிய ஆயுதங்களை எப்படி இராணுவ அடிப்படையில் மேற்பார்வையிட முடியும் என்று அவர்கள் கவலைப்படுவதாயும் கூறப்படுகிறது.

இத்தகு கள்ள ஆயுதங்களைச் செய்வதின் மூலம், ஐசனோவரின் இராணுவத் தணிக்கைத் திட்டத்தை எந்த ஒரு நாடும் வெறும் கேலிக்கூத்தாக்கிவிட முடியும் என்றும் கூறப்படுகிறது.

ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்தின்மீது ஏவக்கூடிய ஆயுதம் ஒன்றை ரஷ்யா தயாரித்துவருவதாகக் கடந்த கிழமையில் ரஷ்யப் பிரதமர் புல்கானின் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அமெரிக்காவும் இத்தகு ஆயுதம் ஒன்றைத் தயாரித்துவருவதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கா இதற்கென 100 - கோடி டாலர் ஒதுக்கியிருப்பதாயும் கூறப்பட்டது. அணுகுண்டு, நீர்வளிக் குண்டு விஷயத்தில், விமானங்களைக் கண்டுபிடித்துவிடலாம் என்றும், ஆனால் அமெரிக்கா தயாரிக்கும் இந்தப் புது 'ஐபிம்' குண்டுகள் எங்கு பதுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எப்படி இயக்கப்படும் என்பதையும் கண்டுபிடிப்பதற்கு வழிஇல்லை என்றும் கூறப்படுகிறது.

குண்டுகளை இயக்கும் விசையை பூமிக்கடியிலிருந்து ஒரு 'அமுக்கு பித்தான்' வெளிக்கிளப்பும்வரை இந்த இரகசிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்றும், வெகுதொலைவில் உள்ள இலக்குமீது, 'ஐபிம்' குண்டுகளை மிகவும் கணக்காகக் குறிவைத்துச் சுட முடியும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியா - ஜப்பான் வர்த்தக ஒப்பந்தம்

கல்கத்தா, ஜன. 11—

ஜப்பானுக்கும் — இந்தியாவிற்குமிடையே வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வதுபற்றி, ஜப்பான் திட்டவட்டமான யோசனைகளை இந்திய சர்க்காரிடம் தெரிவித்திருப்பதாக இந்தியாவில் உள்ள ஜப்பான் தூதவர் தெரிவித்திருக்கிறாராம்.

பர்மாவில் இந்தியத் துணி இறக்குமதி

பம்பாய், ஜன. 11—

இந்த ஆண்டு பர்மாவுக்கு இந்தியத் துணி ஏற்றுமதி குறைந்துவிடக்கூடும் என்றும், இதற்குக் காரணம் சீனா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இறக்குமதி அனுமதியில் 60 சதவிகிதம் பர்மா சர்க்கார் ஒதுக்கிவிட்டதே என்றும் கூறப்படுகிறது.

சிறைக் கைதிகள் வேலை நிறுத்தம்

வழக்கு விசாரணையில் காலதாமதமாவதே காரணமாம்

இரங்கூன் மத்திய சிறையில் சம்பவம்

இரங்கூன், ஜன. 10—

இரங்கூன் மத்திய சிறைச்சாலையில் உள்ள விசாரணைக் கைதிகள், தங்கள் வழக்குகளை விசாரிப்பதில் அதிகமான காலதாமதம் ஏற்படுவதை எதிர்த்து, நேற்றும் இன்றும் விசாரணைக்கு வர மறுத்து சிறைக்குள்ளேயே வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரிய வருகிறது.

நேற்று 40 கைதிகள்வரை வேலை நிறுத்தம் செய்ததாயும் இன்று மேலும் பலர் அவர்களுடன் சேர்ந்துகொண்டதாயும் கூறப்படுகிறது.

இதனால் வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம்.

மூன்று மாதங்களுக்குள்ளாகத் தங்கள் வழக்குகள் விசாரித்து முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், இது முடியாவிட்டால் தங்களை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும் என்றும், அந்த விசாரணைக் கைதிகள் கோருகின்றனராம்.

இது குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரும், மாவட்ட நீதிபதி ஒருவரும் விவாதித்துவிட்டு, வழக்குகள் விசாரணை நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுவது உண்மைதான் என்றும், பல வழக்குகளை விசாரிப்பதற்கு சில நீதிபதிகளே உள்ளனர் என்றும், எனவே, மேலும் இரண்டு நீதிபதிகளை நியமிப்பதுடன், கௌரவ நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

ஒருநாள் வேலை நிறுத்தம் மேற்கொள்வதாக ஓட்டல் முதலாளிகள் அச்சுறுத்தல்

விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமாம்

பம்பாய் மாநில ஓட்டல் முதலாளிகள் சங்க முடிவுகள்

அகமதாபாத், ஜன. 10—

'லைசென்ஸ்' வழங்குதல், விற்பனை வரி விதிப்பு முறை இவற்றில் தங்களுக்குள்ள குறைகளையும் இவைபோன்ற இதர குறைகளையும் குறித்து சர்க்கார் தொடர்ந்து பராமுகமாயிருப்பார்களேயானால், ஒரு நாளைக்கு எதிர்ப்பு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக பம்பாய் மாநில ஓட்டல் முதலாளிகள் சங்கம் அச்சுறுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது.

தொழிலாளர்களின் குறைந்த பட்ச கூலி பற்றிய சட்டத்தை ஓட்டல்களுக்கு அமுல் செய்யக்கூடாதெனவும், அதனை எதிர்கால சர்க்கார்களின் முடிவுக்கு விட்டுவிட வேண்டும் என்றும், இன்னொரு தீர்மானத்தின் மூலம், முதலாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனராம்.

ஓட்டல் தொழிலுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனராம்.

அகில இந்திய ஓட்டல் முதலாளிகள் சங்கம் ஒன்று நிறுவுவதற்கு முயற்சிக்கவேண்டும் என்றும் சங்கக் கூட்டத்தில் கருத்தறிவிக்கப்பட்டதாம்.

சோவியத் இளைஞர் குழு இந்தியா வருகிறது

சோவியத் இளைஞர் பாசிச எதிர்ப்புக் குழுத் தலைவரான செர்ஜராம்னோவஸ்கி என்பாரின் தலைமையில் 124 பேர்களடங்கிய ரஷ்ய இளைஞர் குழு ஒன்று ஜனவரி 21-ம் தேதியன்று மாஸ்கோவிலிருந்து பயணமாகி, ஜனவரி 24-ம் தேதியன்று இந்தியா வந்து சேரும்.

நெல் அரவை ஆலை

சென்னை, ஜன. 11—

'கைக்குத்தல் அரிசிக்கே ஊக்கமளிப்பது சர்க்காரின் கொள்கை; எனவே, மாவட்ட கலெக்டரிடம் திட்டமான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல், நெல் அரவை ஆலை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டாம்' என்று பொதுமக்களை சென்னை சர்க்கார் கேட்டுக் கொள்கின்றனராம்.

சென்னை சர்க்கார் 'தன்மானம்' பெறுகிறது?

சென்னை, ஜன. 11—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல —மிகக் குறைவானது; எனவே, இதை அதிகப்படுத்தவேண்டும; சில தொழில் திட்டங்களையேனும் சென்னையில் ஆரம்பிக்கவேண்டும்"

என்று, சென்னை சர்க்கார் திட்டக் குழுவிற்கு கடிதம் ஒன்று தீட்டுவர் என்று தெரியவருகிறது.

"வடநாட்டில் பல மாநிலங்கள் போல தென்னாடு தொழில் துறையில் முன்னேறவில்லை; ஆதலால், தென்னாட்டுத் தொழில் முன்னேற்றத்திற்குக் கணிசமான தொகை ஒதுக்குவது அவசியம்"

என்றும்கூட சர்க்கார் வற்புறுத்துவார்கள் என்று கூறப்படுகிறது.

"திட்டக் குழு நகல் அறிக்கையில், சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கியுள்ள தொகையை அதிகரிக்க வேண்டுமே ஒழிய குறைக்கக் கூடாது"

என்றுவேறு சென்னை சர்க்கார் தனது கடிதத்தில் வற்புறுத்தும் என்றும் தெரியவருகிறது.

வரும் ஜனவரி 20, 21-ம் தேதிகளில் புதுடில்லியில் நடைபெறப்போகும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், முதன் மந்திரி காமராசர், நிதி மந்திரி சுப்பிரமணியம் இருவரும் கலந்துகொண்டு, மேலும், சென்னை மாநிலத்திற்கு அதிகப் பணம் தருமாறு வற்புறுத்துவார்கள் எனத் தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12-1-'56 வியாழன்

அதை மட்டுந்தானே செய்ய முடியும்?

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழில் துறையில் தென்னாடு எந்த அளவில் புறக்கணிக்கப்பட்டதோ, அதனினும் கூடுதலான அளவில் வடநாடு சலுகை பெற்றிருக்கிறது என்பது திராவிட இயக்கத்தாரின் குற்றச்சாட்டு மட்டுமல்ல; காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்ட எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் மேற்படி குற்றச்சாட்டை சுமத்தியே வந்துள்ளனர்.

தென்னிந்தியாவில் ஜீவ நதிகள் நிரம்ப இல்லாத காரணத்தாலும், அவைகள் வடநாட்டிலேயே இருப்பதாலும் பெரும் பெரும் அணைக்கட்டுகளும், நீர்த்தேக்கங்களும், மின்சார உற்பத்தி நிலையங்களும் அப்பகுதியிலேயே மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது எனக் கூறப்பட்டு வருகிறது. இக்கூற்றில் ஓரளவு உண்மை இருப்பது போலவே, மேல் நோக்காக நோக்கும் பட்சத்தில் ஏற்படும்; அதுவும், நுணுகி ஆராயுமிடத்துத் தூள் தூளாகச் சிதறிவிடும்.

வடநாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பிரம்மாண்டமான நீர்த்தேக்கங்களுக்கும் அணைக்கட்டுகளுக்குந்தான், மேற்குறிப்பிட்ட சமாதானம் தரப்படுகிறது என்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வட இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள புதுப் புதுத் தொழிற்சாலைகளுக்கு சமாதானம் என்ன? சிந்திரி செயற்கை உரத் தொழிற்சாலை பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைதரும் வாய்ப்பல்லவா? சித்தரஞ்சன் புகைவண்டி இயந்திரத் தொழிற்சாலை, பல்லாயிரக்கணக்கான மக்களின் துயர் துடைக்கும் கருவலல்லவா? திராம்பி எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை புதியதொழிலாளர்களின் துயர் துடைக்கப் பயன்படுகிறதல்லவா? ஸ்டான்வாக் எண்ணெய் சுத்திகரிப்புச்சாலையும் வடநாட்டு மக்களின் வேலையின்மையைக் குறைக்கப் பயன்படுகிறதல்லவா? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் துவங்கப்பட்டு வடநாட்டு மக்களுக்கு மட்டுமே வாழ்வளித்துவரும் எண்ணத் தொலையாத பற்ற சிறு சிறு தொழில்களைக் குறித்து நாம் இங்கு குறிப்பிடவில்லை.

தென்னாடு, ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலேயே தொழில் துறையில் அலட்சியப்படுத்தப்பட்டுக் கிடக்கிறது. நம் நாடு, விவசாயம் ஒன்றையே நம்பி வாழ்ந்துகொண்டு வந்திருக்கிறது, பல நூறு ஆண்டுக்காலமாக!

தொழில் துறையில் ஏற்கனவே பின்தங்கிக் கிடக்கின்ற பகுதியான தென்னாட்டிற்குத்தான், முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொழில் துறை ஏற்பாட்டில் முதலிடம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும், இந்தியப் பேரரசு. அப்படிச் செய்வது மாபெரும் தவறு என இந்தியப் பேரரசு எண்ணிவிட்டது என்பதை, அதன் செயல் மெய்ப்பிக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் காலத்தில், தென்னாடு தொழில் துறையில் பின்தங்கிக்கிடந்த போதிலும், கிடைக்கும் வருவாய் குறைவாக இருக்கும் காரணத்தினால் விவசாயத்தில் சலிப்பேற்பட்டு, வயிற்றுப் பிழைப்பைத் தேடி வேறு நாடுகளுக்குச் செல்ல விரும்பினால், விரும்பும் மக்களை வெளிநாடுகளுக்குக் கடத்திச்செல்ல, வாய்ந்த வழிகாட்டியாகவும் பாதுகாப்பளிக்கும் நண்பனாகவும் அந்த ஏகாதிபத்தியம் இருந்துவந்தது.

அவ்வாறு வெளிநாடு சென்று வயிறு பிழைக்க இருந்த வாய்ப்பும், தென்னாட்டு மக்களிடமிருந்து, சுதந்திரம் கிடைத்த பின் தட்டிப் பறிக்கப்பட்டுவிட்டது.

கூலிகளாகக் குடிபுகுந்த ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இன்று தென்னாட்டினர் விரட்டி விரட்டி அடிக்கப்படுகின்றனர். செத்தோம்-பிழைத்தோம் என அவர்களும் தென்னாட்டிற்குத் திரும்பி ஓடிவருகின்றனர்.

அவர்கள் வருகை, இங்குள்ளவருக்கு உற்சாகமளிப்பதாகவோ, மகிழ்ச்சி ஊட்டுவதாகவோ இல்லை. மருட்சி அளிப்பதாகவே இருக்கிறது. படுநாசம் விளைவித்தக் கடும் காற்றையும், கடல் கொந்தளிப்பையும்விட, வெளிநாடு சென்றவர் வீடு திரும்புவது பெரும் புயலாக இருப்பதாக இங்குள்ளோர் அஞ்சுகின்றனர். காரணம், கால் வயிறு கஞ்சியையும் பகிர்ந்துகொள்ள வருகின்றனரே என்ற ஏக்கம் மிகுவதேயாகும்.

ஏகாதிபத்தியக் காலத்தில் தென்னாடு தொழில் துறையில் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது. இங்குள்ளோர் வயிறு பிழைக்க இருந்த வாய்ப்பும் சுதந்திரம் கிடைத்த பின்னர் துண்டிக்கப்பட்டுவிட்டது. சுதந்திரத்தின் விளைவாக, வெளிநாடு சென்றிருந்தவர்கள் தாய் வீடான தென்னாடு நோக்கிவரும் புதிய நிலை பிறந்திருக்கிறது.

ஆக, இந்த மூன்று காரணங்களையும் சீர்தூக்கிப் பார்த்திருக்குமானால், முதல்ஐந்தாண்டுத் திட்டத்திலேயே, தென்னாட்டிற்கு முதலிடம் கொடுத்திருக்கவேண்டும், இந்தியப் பேரரசு. ஆனால், கொடுக்கத் தவறிவிட்டது. தவறிவிட்டதுடன், ஏற்கனவே தொழில் மிகுந்த வடநாட்டிலேயே மேலும் மேலும் தொழில்களைக் குவித்திருக்கிறது. இது, ஒரு வஞ்சனையேயாகும் என்பர் நடுநிலையாளர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தென்னாட்டிற்குரிய நியாயம் வழங்கப்படுமா என்பது ஐயத்திற்குரியதாகவே இருக்கிறது. இந்த ஐயப்பாட்டில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம், நமது நிதி அமைச்சர்!

'ரூ. 400 கோடிக்கு திட்டம் தந்தோம்; அதை ரூ. 200 கோடியாக வெட்டி வீழ்த்தினீர்கள். அதுவும் இப்பொழுது ரூ. 175 கோடியாகக் குறைக்கப்படுகிறதே!' எனத் திட்டக் குழுவிடம் அழுது ஆற்றி இருக்கிறார், நமது நிதி அமைச்சர். அவரால், அதை மட்டுந்தானே செய்ய முடியும்?

எவ்வளவு தாராளம்?

தென்னாட்டுக்கு கிடைத்த உதவித் தொகையின் இலட்சணம்!

புதுடில்லி, ஜன 11—

இந்திய சர்க்கார், கைத்தொழிலின் அபிவிருத்திக்காக அகில இந்தியக் கைத்தொழில் போர்டுக்கும், சென்னை, மேற்கு வங்காளம், சௌராஷ்டிரம், இராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கும் உதவித் தொகையாகவும், கடனுதவியாகவும், மேற்கொண்டு மொத்தம் சுமார் ரூ. 5,63,000 வழங்கியுள்ளனர்.

மலபார் மாவட்டத்தில் அரவக்கோடில் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக, சென்னை மாநிலத்திற்கு உதவித் தொகையாக ரூ. 5,450 வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றும், மேற்கு வங்காளத்துக்கு இரண்டு கடன்களாக மொத்தம் ரூ. 20,000—உதவித் தொகையாக ரூ 6,740 வழங்கப்பட்டிருக்கிறது;

சௌராஷ்டிராவுக்கு உதவித் தொகையாக ரூ 16,000; இராஜஸ்தானுக்குக் கடனாக ரூ. 12,000—உதவித் தொகையாக ரூ 9,255, இமாசலப் பிரதேசத்துக்கு உதவித் தொகையாக ரூ. 9,600—இவ்வாறெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஜெர்மனியில், இவ்வருடம் நடத்தப்படவிருக்கும் லீப்சிக் பொருட்காட்சியில் இந்திய கைத்தொழில் சாமான்களைக் காட்சியில் வைக்க ஏற்பாடு செய்வதற்காக ரூ. 4,75,000 செலவிட அகில இந்திய கைத்தொழில் போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 8,000 ஊழியர்கள்மீது குற்றப் பத்திரிகை

கல்கத்தா பாங்கி முதலாளிகள் முடிவு

கல்கத்தா, ஜன. 10—

கல்கத்தா நகரில் இரண்டு நாள் பாங்கி வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட 8,000 ஊழியர்கள் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் போவதாகக் கல்கத்தா பாங்கி முதலாளிகள் தீர்மானித்துள்ளனராம். வேலை பெரும் அளவில் பாக்கி விழுந்து கிடப்பதால், உடனடியாக நகர 'கிளியரிங்' நிலையத்தைத் திறப்பது இயலாது என்று அவர்கள் தெரிவித்தபோது சர்க்காரிடம் இந்தத் தகவலையும் வெளியிட்டிருக்கின்றனராம்.

பாங்கி ஊழியர்சங்கம் அறிக்கை விடுத்த பின்னும், ஊழியர்கள் அதிக நேரம் வேலை செய்து பாக்கி உள்ள வேலைகளை முடித்துத் தர மறுத்துவிட்டதே 'கிளியரிங்' நிலையம் திறக்க முடியாமலிருப்பதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இறந்துபடும் சர்க்கார் ஊழியர் குடும்பத்தாருக்கு உதவ ஏற்பாடு

பம்பாய் சர்க்கார் முடிவு

உத்தியோகத்தில் இருக்கும்போது, இயற்கை எய்திவிடும் சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்களின் குடும்பங்களுக்குப் பராமரிப்பு வழங்குவதற்கான ஏற்பாடு ஒன்றை பம்பாய் சர்க்கார் முடித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ரூ. 500-க்கு அதிகம் போகாமல், கடைசியாகப் பெற்றுக் கொண்டிருந்த சம்பள விகிதப்படி இரண்டு மாதச் சம்பளம் வரை முன்பணமாக அத்தகையோர் குடும்பத்திற்குத் தருவதென முடிவு செய்திருக்கின்றனராம்.

இறந்துபடும் ஊழியர்கள் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ குறைந்தது மூன்றாண்டுகளுக்குப் பதவியிலிருந்தோருக்கு; அவர்கள் தினசரி சம்பளம் பெறுபவர்களாயினும் அல்லது, சம்பளத்துடனோ சம்பளமில்லாதோ விடுமுறையிலிருப்பவர்களாயினும்கூட. அவர்கள் குடும்பத்தவர் இந்த உதவி பெறுவர் என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கின்றனராம்.

திரு-தமிழகத்தில் பெரும் புயல் உருவாகிறது?

பனம்பள்ளி-பட்டம்-நடராச பிள்ளை கூட்டுச் சதியா?

திரு-தமிழகத் தலைவர்கள் கோதிப்பு

நடராச பிள்ளையின் அந்தரங்கம் அம்பலம்

திருவாங்கூர்-கோச்சி தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைவது அங்கு வாழும் தமிழர் நலனுக்கு உகந்தது அல்லவென்றும், அவை கேரள மாநிலத்திலேயே இருப்பதுதான் தமிழர்களுக்கு நல்லது என்றும், தமிழர்களுக்குத் தேவையான பாதுகாப்புகளை பனம்பள்ளி சர்க்கார் அமைத்துத்தரும் என்றும் ம. சோ. கட்சியைச் சேர்ந்தவரும், சட்டசபை உறுப்பினரும், மந்திரியாயிருந்தவருமான நடராசப் பிள்ளையின் விபரீதப் போக்கிற்கு எதிராகப் பலத்த கண்டனக் குரல் எழுப்பப்படுகிறது—திருவிதாங்கூர் முழுவதுமாக!

"பிரிட்டிஷ் யுத்தகால மந்திரியாயிருந்த அமெரியின் மகனை ஜன் அமெரி, ஜெர்மானியரின் யுத்தக் கைதியாகியிருந்தபோது பிரிட்டிஷ் மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் விரோதமான பிரசார வேலையில் ஈடுபட்டு, சொந்த நாட்டிற்கு தேசத் துரோக வேலைகளைச் செய்துவந்தான்; அதைப்போல, மலையாளிகளின் 'கைதி'க் கூண்டில் சிக்கிவிட்ட நடராச பிள்ளை, தமிழர்களுக்கும்—தமிழ் நாட்டிற்கும் துரோகமிழைக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்,"

என்று, குஞ்சன் (நாடார்) எம். எல். ஏ. குறிப்பிட்டிருக்கிறார்.

"தமிழர்களுக்கு எதிரான துரோகச் செயல்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; இன்றேல், திரு-தமிழகத்தில் மீண்டும் ஒரு அரசியல் புயல் ஏற்படும். அதன் முடிவு எப்படியிருக்கும் என்று எவருக்கும் தெரியாது,"

என்றும் அவர் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் பேசுகையில் எச்சரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

★

"பட்டம் தாணுப்பிள்ளை, தமிழர்களைச் சுட்டு வீழ்த்தியபோது ஊமையாய் நடித்த நடராசப் பிள்ளை, இப்போது, தமிழர் நலனில் அக்கறை காட்டுவதாகக் கூறுவதற்கு என்ன அருகதை படைத்திருக்கிறார்? பனம்பள்ளி—நடராச பிள்ளை போன்றவர்களின் கூட்டு வேலைகள் யாவும் தமிழர்களுக்கு எதிரான சூழ்ச்சிகளேயாகும்.

"சட்டசபைக் கூட்டத்தில் திரு-தமிழக மக்கள் தாய்த் தமிழகத்துடன் சேர்வதற்கு ஒப்புதல் தெரிவித்துப் பேசினார்; பின்னர், தான் பேசியதை எல்லாம் மறந்து, திரு-தமிழக மக்கள் தாய்த் தமிழகத்துடன் சேர்வதை எதிர்த்து வாக்களித்தார்; இன்று, எதை எல்லாமோ அலசி, தமிழர் நலனில் அக்கறை காட்டுவது போலப் பேசுகிறார். இதில் எல்லாம் தமிழர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்"

என்று, திரு-தமிழகக் காங்கிரஸ் தலைவர் நேசமணி சூடு கொடுத்திருக்கிறார்.

★

"ரோம் எரிந்து கொண்டிருந்தபோது, பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனைப் போல, பட்டம் தாணு தமிழர்களைச் சுட்டுக்கொன்று, நிரபராதிகளைச் சிறையில் அடைத்துக் கொடுமை பல புரிந்து கொண்டிருந்தபோது, இந்த நடராச பிள்ளை, பட்டம் தாணுவுக்கு வலிமை தந்து கொண்டிருந்தார்; பட்டத்திற்குத் தாளம் போட்டார்.

"பட்டத்தின் கொடுமைக்காளான தமிழ் மக்களுக்கு அப்போது மந்திரியாயிருந்த நடராச பிள்ளை, அவர்களுக்குப் பாதுகாப்புத் தேடித்தர முடியவில்லை; இனிமேல், தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று பேசுகிறார். என்ன பசப்புவித்தை இது?"

என்று, தோழர் டி. டி. டானியல் இடித்துரை தந்திருக்கிறார்.

★

"நடராச பிள்ளை, எவரை மடையர்களாக்க நினைக்கிறார்? பனம்பள்ளியையா—பொது மக்களையா? எப்பொழுதும் பிறரது 'எடுப்பார் கைப்பிள்ளை'யாய் இருந்து வரும் அவர், தமிழர்களுக்குப் பாதுகாப்புத் தருவது பற்றிப் பேசுகிறார். சிறுபான்மையினருக்கு பாதுகாப்புக் கிடைப்பது, பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தை—மனப்போக்கைப் பொறுத்ததாகும். பாதுகாப்புகளின் மூலம் எந்த ஒரு சிறுபான்மையினரும் பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது சரித்திரம்

(4-ம் பக்கம் பார்க்க.)

கழகச் செய்திகள்

மேலூர் தி. மு. கழகம்

8—1—56ல் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், பொங்கல் விழா கொண்டாடுவதெனவும், புயல் நிவாரண நிதிக்காக ஜன. 14, 15 ஆகிய தேதிகளில் கழகத் தோழர் ஆறுமுகத்தை புலிவேடம் தாங்கி விளையாடச் செய்து அதன் மூலம் புயல் நிவாரண நிதி திரட்டுவதெனவும், மாவட்ட பிரதிநிதி தோழர் வ. அ. சுப்பிரமணியின் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், தோழர் புநிதம் - மு. குணசீலன் அவர்களை மாவட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தும், புதிய உறுப்பினர்களை (பெண்கள் உள்பட) சேர்த்துக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நாகை தி. மு. கழகம்

8—1—56 காலை 10 மணியளவில், தோழர் கே. வி. இராமன் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது தோழர் கே கே. சித்திரவேலுவிடமிருந்து கழக வரவு-செலவுகளை சரிபார்த்து ஒப்புக்கொண்டதுடன் பாரிபாக்கம் கண்ணப்பரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், இரு செயற்குழு உறுப்பினர்களை சேர்த்துக்கொள்வதற்கு செயலாளருக்கு அதிகாரம் அளித்தும், 22-1-56ல் பொங்கல் விழா கூட்டத்தை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டன.

அக்கிப்பேட்டை—பெங்களூர் தி. மு. கழகம்

8—1—56 காலை 10 மணியளவில், தோழர் வி. கே. நடேசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தமிழகப் பகுதிகளில் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், சென்ற எட்டு மாத வரவு-செலவுக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டன.

மணப்பாறையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

7—1—56 மாலை 7 மணிக்கு மணவை நேரு சதுக்கத்தில், தோழர் மா. இளங்கீரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நா சக்கரபாணி, என். வடிவேலன், காசிநாதன், மி. சு இளமுருகு, திருச்சி எம். எஸ் மணி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகள் பற்றி விரிவுரையாற்றினர்.

சிறுகளப்பூர் தி. மு. கழகம்

திருச்சி மாவட்டம் சிறுகளப்பூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 4—1—56ல் ஊராண்மைக் கழக அலுவலகத்தில், தோழர் ம. தங்கையா தலைமையில் நடைபெற்றபோது, கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், 16—1—56ல் திராவிடர் திருநாளை தோழர் முத்துசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடத்திக் கொண்டாடுவதெனவும், அன்று தோழர் சி. கிருஷ்ணன் தலைமையில் ஊர்வலம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தி. சந்தைப்பேட்டை நகர தி. மு. கழகம்

8—1—56 இரவு 8 மணிக்கு, வள்ளுவர் படிப்பகத்தில், கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ச. வ. சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்றபோது, தமிழர் திருநாளை சிறப்பான முறையில் கொண்டாடுவதெனவும், மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை—44-வது வட்ட தி. மு. கழகம்

7—1—56 இரவு 9-30 மணியளவில் தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், திராவிடர் திருநாளில் ஏழை மக்களுக்கு உணவு அளிப்பதெனவும், அன்று நடைபெற இருக்கும் நிகழ்ச்சிக்கு தோழர் ஏ. இராதாகிருட்டிணனை தலைவராகத் தேர்ந்தெடுத்தும், நவம்பர் முதல் டிசம்பர்முடிய உள்ள வரவு-செலவு கணக்குகளும் ஒப்புக்கொள்ளப்பட்டும், 19—11—55ல் நடைபெற்ற செயற்குழுவின் 5-வது தீர்மானத்தின்படி கழகப் பணிமனையை காலி செய்து 28-12-55ல் 1/2 காரணீசுவரர் கோவில் தெருவில் அமைக்கப்பட்டது.

சேலம் 12-வது வட்ட தி. மு. கழகம்

4—1—56-ல், சேலம் 12-வது வதுவட்ட தி.மு.க. அமைப்புக்கூட்டம் தோழர் பரசுராமன் அவர்கள் தலைமையில் அவரது இல்லத்திலேயே நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: பெ. நடேசன், துணைச் செயலாளர்: த. முனுசாமி; பொருளாளர்: அண்ணாமலை; நிருவாகக் குழு உறுப்பினர்கள் : சி. பரசுராமன், நடராசன், ஜகந்நாதன், காசிநாதன், இராமன், சுப்பிரமணியம், கோவிந்தராசு, தங்கவேல்.

கழகத் தவக்க விழாவை 16—1—56 காலை 10 மணியளவில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பிளாக்பள்ளி — பெங்களூர் தி. மு. கழகச் செய்திகள்

7—1—56 மாலை 7 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் இரங்கநாதன் தந்தையும், தோழர் ஜே. எஸ் நாதன் மகள் செல்வக் குமாரியும் இயற்கை யெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

25—12—55ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் டி. எஸ். கோபால் அவர்களின் பெண் மகவிற்கு 'சந்திரா' என்று தி மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களால் பெயரிடப்பட்டது. அந்தப் பொதுக்கூட்டத்தில் பெங்களூர் சர்வக் கட்சியின் சார்பில் அமைக்கப்பட்ட புயல் நிவாரணக் குழுவால் ரூ 34—4—0 வசூலிக்கப்பட்டது.

கழகச் சார்பில் நடத்தப்படும் 'இளங்கோ இலவச இராப் பள்ளி' சார்பில் பொங்கல் பெருவிழா, கழகக் கட்டிடத்தின் எதிர்த் திடலில் 15—1—56ல் கொண்டாடப் படும். காலையில் ஏழைகட்கு கஞ்சி வார்க்கப்படும்; நண்பகலில் சொற்போட்டியும், விளையாட்டு போட்டிகளும் நடைபெறும். மாலை பொதுக்கூட்டத்திற்கு திரு. ஜே எஸ் நாதன் தலைமை தாங்குவார். தமிழ்ப் பேராசிரியர் தண். இ. வேங்கடாசலம் பரிசுகளை வழங்குவார். தோழர்கள் இ. சோழன், ஜி. எப். லூயிஸ், புத்தன் ஆகியோர் சொற்பெருக்காற்றுவர். பின், மாணவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்படும்.

மதுரைநகர் தி. மு. கழகம்

3—1—56 இரவு 10 மணிக்கு, தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில் வழங்கும் தேவிகுளம், பீர்மேடு, செய் யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தமிழ் தாலுகாக்களையும், தமிழகத்தின் வடக்குப் பகுதிகளில் வழங்கும் திருத்தணி, நகரி, புத்தூர், சித்தூர் ஆகிய தமிழ்ப் பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று இந்தியப் பேரரசினையும், சென்னை மாநில அரசினையும் வற்புறுத்தியும், பொங்கல் விழாவை 15—1—56ல் கொண்டாடுவதென்றும் முடிவுகள் செய்யப்பட்டன.

கடம்பூர் தி. மு. கழகம்

6—1—56 இரவு 8-30 மணிக்கு கழக அலுவலகத்தில், தோழர் எம். எஸ். பி. சாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், தேவிகுளம், பீர்மேடு போன்ற தமிழர் வாழும் தாலுகாக்களை தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்று மத்திய அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், 'சென்னை மாகாணம்' என்று அழைப்பதைத் 'தமிழ் நாடு' என்று அழைக்குமாறு மாநில சர்க்காரை வற்புறுத்தியும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தைத் திங்கள் இரண்டாவது வாரத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், 14—1—56-ல் தமிழர் திருநாளை கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

'இராஜப் பிரமுகர்'களுக்கு பண்டித பந்த் அபயம்!

பதவி பறிபோனாலும் பணம் கிடைத்தால் போதுமாம்!

புதுடில்லி, ஜன. 10—

மாநிலக் குழுவின் சிபாரிசுகளின்படி, 'இராஜப் பிரமுகர்கள்' என்ற பதவி ஒழிக்கப்பட்டாலும், அவர்களுக்குத் தரப்படும் பெருந்தொகையான சம்பளம், படி, இதரச் செலவுகளுக்கான பணம் முதலியவை குறைக்கப்படக்கூடாது என்றும், அவை தங்களுக்கு ஆயுள் பரியந்தம் கிடைத்துக்கொண்டிருந்தால் 'இராஜப் பிரமுகர்' என்ற பெயரையே விட்டுவிடத் தயாராக இருப்பதாகவும், 'இராஜப் பிரமுகர்'கள், உள்நாட்டமைச்சரிடம் தெரிவித்தனராம்; அவரும், இவர்களுக்கு இந்த விஷயத்தில் அபயம் அளிப்பதாகக் கூறியிருக்கிறாராம்"

மாநிலக் குழு சிபாரிசுகளைப் பொறுத்து சர்க்கார் மேற்கொள்ளும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருப்பதாக உள் நாட்டமைச்சர் பண்டித பந்தைச் சந்தித்த நான்கு 'இராஜப் பிரமுகர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

சௌராஷ்டிரா, பெப்சு, இராஜஸ்தான், மத்திய பாரத் ஆகிய மாநிலங்களின் 'இராஜப் பிரமுகர்'கள்தான் பண்டித பந்தைச் சந்தித்தனர் என்றும், அவர்கள் தங்களுக்குள்ளாகவே முதலில் இது குறித்துப்பேசிவிட்டுப் பின்புதான் முடிவு தெரிவித்தனர் என்றும், நாட்டு முன்னேற்றம் கருதித் தாங்கள், பசல் அலி குழுவினர் தங்களைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களை மறுப்பதற்கில்லை என்று கூறியதாயும் கூறப்படுகிறது.

விஞ்ஞானத் துறையில் புதிய சாதனை?

ஜெருசலேம், ஜன. 9—

கருத் தரித்திருக்கையிலேயே, பிறக்கவிருக்கும் குழந்தை ஆணா—பெண்ணா என்பதை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் முறையொன்றை, மூன்று இஸ்ரேல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம்.

கருப்பைக்கு மேல்பூச்சாக உள்ள தசை(ஜவ்வு)யைப் பரிசோதனை செய்து, இதைச்சொல்லி விடக்கூடுமாம்.

'இஸ்ரேலுக்கு உதவுவோருடன் ஒப்பந்தம் செய்யாதீர்'

அராபிய நாடுகளுக்கு முஸ்லீம் பல்கலைக் கழகம் உத்தரவு

கெய்ரோ, ஜன. 10—

"இஸ்ரேலுக்கு உதவுகிற எந்த ஒரு வெளிநாட்டுடனும், அராபிய நாடு எதுவும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளக் கூடாது"

என்று, முஸ்லீம் மத பல்கலைக் கழகமான அல் அஜார் உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறது.

"இஸ்ரேல், அராபியருக்குச்சொந்தமான பிரதேசங்களை ஆக்கிரமித்துக்கொண்டு, அவற்றினை உரியவர்களுக்குத் திருப்பித் தர மறுத்துவருகிறது. அத்தகைய இஸ்ரேலுக்கு எந்த வகையாலும் உதவி செய்யும் எந்த ஒரு நாட்டுடனும் கூட்டுறவு கொள்வது இஸ்லாமிய போதனைகளுக்கு விரோதமானது" என்றும் பல்கலைக் கழகம் வர்ணித்திருக்கிறதாம்.

உலகப் புகழ்வாய்ந்த 'தாஜ் மகால்'

சில இடங்களில் 'கீறல்' ஏற்பட்டுள்ளதாம்!

புகழ்வாய்ந்ததும், சிற்பச் சித்திர வேலைப்பாடுகள் அமைந்ததும், உலக அதிசயங்களுள் ஒன்றுனதுமான 'தாஜ் மகால்' சுவர்களில் மூன்று இடங்களில் பெரும் கீறல்கள் ஏற்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தக் கீறல்களினுல், மகாலின் அழகே கெட்டுவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

'ஜீலோ சானு' என்றழைக்கப்படும் மகாலின் வெளிப்புற அமைப்பு ஒன்று, அண்மையில் சரிந்து விழுந்துவிட்டது என்றும், இதனுல் மகாலின் சிற்ப வேலைப்பாடு சிறிது பழுதாகிவிட்டதென்றும் தெரியவருகிறது.

இப்போதுதான், பலரும் உல்லாசச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் காலம் என்பதால், 'தாஜ்மகால்' பார்க்க வருவோரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக வளர்ந்து வருகிறதாம்!

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 15-ஆயிரம் பெறுமான துணிகள்

செஞ்சிலுவைச் சங்கத்தவர் வழங்குவர்

சென்னை, ஜன. 10—

மாநிலத்தில் அண்மையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு சுமார் ரூ. 15,000 பெறுமான துணிகள் வழங்குவதென இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் சென்னை மாநில கிளையினர், டாக்டர் பூ கிருஷ்ணராவ் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முடிவு செய்திருக்கின்றனர். தொடர்புடைய மாவட்டக் கிளைச் சங்கங்கள் மூலம் இத்துணிகள் வழங்கப்படும்.

ரூ. 15,000-க்கு தைத்த ஆடைகள் வாங்கி அவற்றை மக்களுக்கு அளிப்பதென முடிவு செய்திருக்கிறார்களாம்.

முடியுமானுல் வரும் பொங்கல் தினத்தன்றே அது வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

★

தண்ணீர் வசதிக்கு ரூ. 50 கோடியாம்!

சென்னை, ஜன. 11—

இரண்டாம் திட்டத்தில், சமூக வசதிகளுக்கு என்ற தலைப்பில் ஒதுக்கப்படும் தொகையில் நகர்ப்புறத் தண்ணீர்வசதி செய்து தருவதற்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

முசாதிக்கின் நண்பர் கைது

டெஹ்ரான், ஜன. 9—

பாரசீக நாட்டின் முன்னாள் பிரதமரான டாக்டர் முசாதிக்கின் உற்ற துணைவரான உசேன்பிக்தி என்பார், கடந்த 1951-ம் ஆண்டில் பிரதமர் அலி ரஜ்மாரா என்பார் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக நேற்று மாலை கைது செய்யப்பட்டிருக்கிறாராம்.

பாரசீக எண்ணெய்க் கிணறுகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்ற முசாதிக்கின் கொள்கையைத் தீவிரமாக ஆதரித்து வந்தவர் இந்த உசேன்பிக்தி என்று கூறப்படுகிறது.

சிவகாசி தோழர்கள் வசூல்

சிவகாசியில் தி. மு கழகம், ம. சோ., கம்யூனிஸ்டு ஆகியவைகளின் கூட்டு முயற்சியில், மூன்று கட்சித் தோழர்களில் சிலர் பலவித வேடங்கள் தாங்கி நகரில் வீடு வீடாகச் சென்று உண்டியல், அரிசி, உடை ஆகியவை வசூலித்தனர்.

இதுவரையில் ரூ. 628–10–6ம், 12¼ படி அரிசியும், 18 துணி உருப்படியும் வசூலித்து அனுப்பி வைத்துள்ளனர்.

ஒரக்காட்டுப்பேட்டை தி.மு.க.

1—1—56ல், தி.மு. கழகச் சார்பில், கழகத் தோழர்கள் புயல் நிவாரணத்திற்காக ரூ 88-ம், 144 ஆடைகளும் வசூலித்து, தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தனர்.

★

குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம்

7—1—56 இரவு 10 மணிக்கு நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்ட முடிவுப்படி, மக்களிடம் வசூலிக்கப்பட்ட ரூ. 50—3—0 தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

★

மாதவரம் தோழர்களின் கூட்டு முயற்சி

தோழர் டி. பி. ஏழுமலை, எம். எல். ஏ. அவர்கள் தலைமையில், ஊராண்மைக் கழகத் தலைவர், உறுப்பினர்கள் உள்ளிட்ட காங்கிரஸ் தோழர்களும், மாதவரம் தி. மு. கழகத் தோழர்களும் புயல் நிவாரண நிதிக்கென ரூ. 207—14—9 ; 2 மூட்டை அரிசி ; பழைய துணி 91—வசூலித்தனர்.

நாடெங்கும் திராவிடர் திருநாள்

★

சென்னையில்

சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை நேப்பியர் பார்க்கில், 14—1—56 பிற்பகல் 2 மணிக்கு தோழர் இளம்பரிதி தலைமையில் தோழியர் ஜி. கஸ்தூரியின் இன்னிசையும், இரா. செழியனின் 'சிலந்திக் கூடு' நாடகமும், விளையாட்டுப் போட்டிகளும், பரிசு வழங்கலும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ச. பி. சிற்றரசு, கா. அப்பாதுரை ஆகியோரின் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

14—1—56 காலை 8 மணிக்கு, செம்பியம் 20-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டமும், திராவிடர் திருநாள் சிறப்புக் கூட்டமும் கழக இல்லத்தில் (115 கடைத் தெரு) நடைபெறும்.

14—1—56 காலை 9 மணியளவில், 18-வது வட்ட புளியந்தோப்பு தி. மு. கழகத்தில், திராவிடர் திருநாள், தோழர் ச. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெறும். தேனீர் விருந்தும், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதலும், பேச்சு போட்டியில் வெற்றி பெறும் தோழர்களுக்குப் பரிசு அளித்தலும் நடைபெறும்.

24-வது வட்ட குயப்பேட்டை தி. மு. கழகச் சார்பில், விழாவையொட்டி 14—1—56 காலை 8 மணிக்கு, கழக அலுவலகத்தில் தோழர் வி. கிருட்டிணசாமி கொடி ஏற்றுவார்; பொது மக்களுக்கு இனிப்பும், பொங்கலும் வழங்கப்படும்.

1-வது வட்டம் திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பில், 14-1-56 காலை 9 மணியளவில் தோழர் க. அறிவழகன் தலைமையில் விழா நடைபெறும். பொது மக்களுக்கு பொங்கல் வழங்கப்படும்.

சென்னை—இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் 14—1—56 காலை 8 மணியளவில், தோழர் ஏ. எல். சே. சாமி கழகக் கொடியை ஏற்றிவைப்பார். காலை 8-30 மணிக்கு, தோழர் பொ. ஏழுமலை தலைமையில் ஏழைகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும்.

தோழமைக் கழகச் சார்பில் 13—1—56 இரவு 9 மணிக்கு, எண் 4, சண்முகராயன் சந்து சென்னை 1-ல் உள்ள தோழமைக் கழக பணிமனை முன், விழாவை முன்னிட்டு இசைச் செல்வி ஜி. கஸ்தூரி குழுவினருடன் இன்னிசை நடைபெறும்.

14—1—56 காலை 8 மணிக்குக் கழகக் கட்டிடத்தில் பொங்கல் விழா நடைபெறும்.

14—1—56 காலை 8 மணிக்கு ஸைதை கிருட்டிணப்ப நாயகர் வீதி, 19-ம் இல்லத்தில், தமிழர் விழா நடைபெறும். அது சமயம் சிலம்ப விளையாட்டுகளும், சொற்பொழிவுகளும் நடைபெறும்.

14—1—56 காலை 8 மணிக்கு, இராயபுரம், எண் 7 கவுஸ் மோதின் தெருவிலுள்ள இளைஞர் நற்பணி மன்றப் பணிமனையில், தோழர் நீல துரைக்கண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர் ஜார்ஜ் அவர்கள் தி. மு. கழகக் கொடியேற்றுவார். தோழர்கள் ஜெய்னுலாப்தின், ஜே எஸ் இராசன், ஜே. இளம்பரிதி, என். வி. மதிவண்ணன் ஆகியோர் பேசுவர்.

14—1—56 காலை 9 மணிக்கு, 12-வது வட்ட (மஜீத் பேட்டை) மஜீத் மன்றம் சார்பில், புலவர் செல்வராசன் தலைமையில் விழா கொண்டாடப்படும். தோழர் காஞ்சி-மணிமொழியார் இயக்கக் கொடியை ஏற்றிவைப்பார்.

7-வது வட்ட மூலக்கொத்தளம் அழகிரி மன்றத் திறப்பு விழாவும், பொங்கல் விழாவும் மன்றக் கட்டிடத்தில், 14—1—56 சனி காலை 8 மணிக்கு, தோழர் கே. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் மன்றத்தைத் திறந்துவைப்பார். நகரசபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி கொடியேற்றிவைப்பார். தோழர் நீலதுரைக் கண்ணன், சி. ஆர். பாலசுந்தரம், ஆர். ஜார்ஜ், தி பா. போலேந்திரன் பேசுவர்.

சேவூர் (வ. ஆ. மா.):

14—1—56 காலை 8 மணிக்கு, 243 எண் கட்டிடத்தில் இருந்து வந்த தி. மு. கழக நிலையத்தை 184 எண் கட்டிடத்திற்கு மாற்றி அமைக்கும் விழாவும், திராவிடர் திருநாள் விழாவும் நடைபெறும். கழகக் கொடி ஏற்றுதலும், பொங்கல் வழங்குதலும் நடைபெறும்.

பாலசமுத்திரம்:

தி. மு. கழகச் சார்பில், 14-1-56 மாலை 6 மணியளவில், பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் மு. வசனப்பித்தன் பேசுவார். அது போது, பழனிதுரையரசு தலைமையில் கலை எழில் கலைஞன் குழுவினரின் 'நாட்டுப் பிரிவினை' என்னும் கலை நிகழ்ச்சி அரங்கேற்று விழாவும் நடைபெறும்.

விளாம்பட்டி:

பாண்டியன் படிப்பகச் சார்பில், தோழர் எஸ். வி. சாமி தலைமையில் 14—1—56 காலை 6 மணியளவில் பொங்கல் விழாவும், 8 மணிக்கு, படிப்பக ஆண்டு விழாவும் நடைபெறும். மாலை 6 மணிக்கு தோழர் பி. சுப்பையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

வெள்ளனூர்:

மக்கையில், 14—1—56 மாலை 7 மணிக்கு, விழாவை முன்னிட்டு இசைமுரசு நாகூர் ஈ. எம். அனீபா அவர்கள் இசை விருந்து அளிப்பார்.

வேலூர் (சேலம்):

14—1—56 மாலை 6 மணிக்கு, வ. உ. சி. திடலில், தி. மு. கழகச் சார்பில், தோழர் எம். கருப்பண்ணன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

பெரியகுப்பம்:

பகுத்தறிவு மன்ற திறப்பு விழா—திராவிடர் திருநாள்
14—1—56

தலைவர்:
தோழர் போ. நாராயணன்

பேச்சாளர்கள்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்
பெ. வேதகிரி
தோழியர் வெ. தேசியமணி

★

லால்குடி:

14—1—56 காலை 9 மணிக்கு

தலைவர்:
எம். எஸ். கந்தசாமி

பேசுவோர்:
அன்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி

இசைமுரசு நாகூர் - அனீபா அவர்கள் தம் குழுவினருடன் இசைவிருந்தளிப்பார்.

இடம்:— பூங்காவனம் தியேட்டர் நன்கொடை அணா 4.

கோவை:

14-1-56 மாலை 6-30 மணிக்கு

சொற்பொழிவாளர்கள்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்

இடம்:—ஆர். எஸ். புரம் கல்லறை திடல் (பரியல் மைதானம்)

★

குனியமுத்தூர்:

14—1—56 மாலை 3 மணிக்கு

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
தங்கமாணிக்கம்

இடம்:—மாரியம்மன்கோயில்திடல்

★

சேலம்:

பொங்கல் விழா கூட்டங்கள்
13-1-56 காலை 9-30 மணிக்கு
12-வது வட்ட தி. மு. கழகத் துவக்க விழா
(மேட்டுத் தெரு)

தலைவர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்

துவக்குபவர்:
சி. பி. சிற்றரசு

கொடியேற்றுபவர்:
வி. சிவப்பிரகாசம்

பேசுபவர்:
ஏ. சுப்பிரமணியம்

மாலை 6-30 மணிக்கு
19-வது வட்ட தி. மு. க. சார்பில்
(சாலியர் தெருவில்)

தலைவர்:
கே. ஆர். மாசிலாமணி

பேச்சாளர்கள்:
சி. பி. சிற்றரசு
வி. சிவப்பிரகாசம்
அன்புக்கரசு
ஈ. ஆர். கிருஷ்ணன்
ஏ. சுப்பிரமணியம்

* * *

14—1—56 சனிக்கிழமை
தோழர் க. அன்பழகன் நிகழ்ச்சி
காலை 10: 22-வது வட்டத்தில் திரு. இருளப்பன் படிப்பகத் திறப்பு விழா.
மாலை 5: சேலம் கல்லூரியில் சொற்பொழிவு.

மாலை 6-30 மணிக்கு
அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில்

தலைவர்:
ஏ. குள்ளப்பன்

சொற்பொழிவாளர்:
க. அன்பழகன்
ஈ. ஆர். கிருஷ்ணன்
வி. சிவப்பிரகாசம்

* * *

15—1—56 காலை 10 மணிக்கு
செவ்வாய்ப்பேட்டை 7-வது வட்ட தி மு. கழக ஆண்டு விழா

பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. உ. சண்முகம்
வி. சிவப்பிரகாசம்

மாலை 6-30 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் மேற்படி தோழர்களே சொற்பொழிவாற்றுவர்.

ஈ. வெ. கி. சம்பத்

அண்ணா அவர்களுடன், கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரல்:

ஜன. 13: மாலை 4 மணிக்கு மசானக் கல்லூரியில் சொற்பொழிவு
6-30 மணி-அந்தியூர்
இரவு 9 மணி—குன்னத்தூர்.
14: மாலை—கோவை.
15: காலை 10 மணி—வால்பாறை
மாலை 6-30 மணி—பாலக்காடு.
16: மாலை 5 மணி-சூலூர்
இரவு 9 மணி—திருப்பூர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜன. 16: புதுப்பட்டி (கம்பம்)
17: கடையநல்லூர்
18: கீழஆயக்குடி
19: சாத்தான்குளம்
21: மேலக்கற்கண்டார் கோட்டை
22: மதுரை

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜன. 13: தாத்தையங்கார் பேட்டை தி. மு. கழக கிளை—திராவிடர் திருநாள்
14: சேலம்—காலை: பொன்னம்மாப்பேட்டை படிப்பகத் திறப்பு விழா
மாலை 5 மணி: நகராண்மைக் கல்லூரி பொங்கல் விழா
இரவு 7 மணி: தி மு.க. கிளை திராவிடர் திருநாள் விழா
15: மாலை: சலகண்டபுரம்
இரவு 10 மணி: செல்லப்பம்பட்டி (புயல் நிவாரண நாடகத் தலைமை)
16: மாலை: விழுப்புரம் தி. மு. கழக திராவிடர் திருநாள் விழா

எஸ். எஸ். தென்னரசு

சுற்றுப் பிரயாணம்

ஜன. 15: வகுரம்பட்டி (நாமக்கல்)
16: சேலம்
17: திருக்கோட்டியூர்
21: புல்லுக்காட்டுவலசை (நெல்லை)
22: தென்காசி
23: சுரண்டை
24: கடையநல்லூர்

பொங்கல் வாழ்த்து

★

வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

லாரி போக்குவரத்திற்கு, எண் 55373-க்கு 'போன்' செய்யுங்கள்.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்.
26, லாரி நிலையம்,
யானை கவுனி, சென்னை-3

திரு- தமிழகத்தில் பெரும் புயல் வீசுகிறது?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காட்டும் உண்மையாகும். கேரளர்களுக்கு தமிழர்கள்மீது நல்லெண்ணம் இந்தப் பகுதியில் இருந்ததில்லை. ஓநாய்களிடத்தில் தமிழர்களைத் தூக்கி விட்டெறியச் சொல்லுகிறார் நடராசப் பிள்ளை; தமிழர்கள் இதைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

'ஒரு நரகம் என்று கேளப்பனால் வர்ணிக்கப்படும் கேரளத்தில் வதிய தமிழர்கள் ஒருபோதும் ஒருப்படமாட்டார்கள்,"

என்று, தோழர் ஞானசிகாமணி, தோழர் நடராச பிள்ளைக்கு உபதேசம் புரிந்திருக்கிறார்.

★

"பனம்பள்ளியும், பட்டமும், அவர்களது தொண்டரடிப் பொடி ஆழ்வார் நடராச பிள்ளையும் தரும் உறுதி மொழிகளுக்கு, காற்றில் பறக்கும் பட்டத்தின் விலை கூடத் தரமாட்டார்கள்—தமிழர்கள்! திரு — தமிழகத்தைச் சுற்றிக் கம்பி வேலி போட்டு, துப்பாக்கியும் ஆயுதமும் தாங்கிய போலீசாரைக் காவல் விட்டு வெளியேற நினைக்கும் தமிழர்களைச் சுட்டு வீழ்த்த உத்தரவும் கொடுத்து, பெண்களை மானபங்கம் செய்ய அனுமதியும் அளித்து, தமிழினத்தைச் சம்சாரம் செய்வது தான் உத்தேச பாதுகாப்புத் திட்டம் போலும்! இதைத் தானே கடந்த சமீப கால வரலாறு, சம்பவங்கள் நமக்குச் சொல்கின்றன,"

என்று, தி. த. நா. காங்கிரஸ் செயலாளர் தோழர் துரைசாமி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகின்றது.

நடராச பிள்ளை மூக்கறுபட்டார்

முயற்சி தோற்றதென ஒப்பம்

திருவனந்தபுரம், ஜன. 11—

திரு—கோச்சி தமிழ் தாலுகாக்களை கேரளத்திலேயே இருக்கச் செய்யவேண்டும் என்பதற்காகப் பெருமுயற்சிசெய்த முன்னாள் (ம. சோ.) நிதி மந்திரி நடராஜ பிள்ளை மூக்கறுபட்டுத் திரும்பியிருக்கிறார்.

அந்தத் தமிழ் வட்டங்களில் உள்ள கட்சிகளை ஒன்றுகூட்டி, ஒரு முடிவு மேற்கொள்ளலாம் எனத் தான் முயற்சித்தது தோற்றுவிட்டதாக அவரே தெரிவித்திருக்கிறார்.

சர்க்காரே வேண்டுமானால், திரு—தமிழகக் கட்சிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டி மேலும் முயற்சிக்கலாம் என்று யோசனையும் தெரிவித்தாராம்.

அந்த மாநாட்டில், சர்க்கார், தமிழ் வட்ட மக்களுக்குப் போதுமான பாதுகாப்புகளுக்கு வசதி செய்து தருவதாக வாக்களிக்க வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தாராம்.

வெள்ள நிவாரணத்திற்குக் கைதிகள் உதவி

நான்கு வேளை உண்ண மறுத்து ரூ. 700 தந்தனர்

வாரங்கல், ஜன. 10—

வாரங்கல் மத்திய சிறைச்சாலையில் உள்ள கைதிகள் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளில் உணவு உட்கொள்ளாதிருந்து, ரூ. 700 வரை மிச்சப்படுத்தி, ஐதராபாத் மாநில முதன் மந்திரி திரட்டும் வெள்ள நிவாரண நிதிக்கு அளித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

ஆதிவாசிகள் கோரிக்கைகள்

ஜகதல்பூர், ஜன. 10 -

ஆதிவாசிகளின் கோரிக்கைகளுக்கு மத்திய, மாநில சர்க்கார்கள் செவிமருப்பதில்லை என்றும், ஆதிவாசிகள்மீது சர்க்கார் இரக்கம் காட்டுவதில்லை என்றும் இங்கு நடைபெற்ற ஆதிவாசிகள் கிசான் மஜ்தூர், சேவா சங்க மாநாடு ஒன்றில் பேசுகையில் வீராமஜ்கி என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டில் சர்க்காரின் போக்கு குறித்து வன்மையான கண்டனம் எழுப்பப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.